

**Friday Sermon**/ வெள்ளிக்கிழமை குத்து.ஃபா

16 February 2018

*(29 Jamad'ul Awwal 1439 AH )*

# STATUS OF FATHER & SON

# தந்தை மற்றும் மகனின் பதவி



## HAZRAT KHALIFATHULLAH MUNIR AHMAD AZIM (A)

உலகனைத்துமுள்ள முஸ்லீம் மக்களுக்கும், எல்லா தோழர்களுக்கும் சலாம் கூறிய பிறகு தஷ்ஹ்ஹீதும், தஅவசும், சூரா அல் பாத்திகாவும் ஓதிக் கொண்டு **ஹஸ்ரத் கலீ.ஃபத்துல்லாஹ் முனீர் அஹமது அஸீம் (அலை)** அவர்கள் தம் ஜுமா பேருரையை ஆரம்பித்தார்.

அன்பிற்குரிய தூதர் முஹம்மது(ஸல்) அவர்கள் இந்த பிரபஞ்சத்தின் முழுமை பெற்ற முன்மாதிரியாகயிருக்கின்றார். அன்னார் தோன்றிய

அவ்வேளையில் மக்கள் குடும்ப உறவுகளை சற்றும் மதிக்காமல், முற்றிலும் நாகரிகமற்றவர்களாக இருந்தனர். இன்றைய தினம் நான் உங்களிடம் பேசத்தீர்மானித்திருப்பது, சந்தை எனும் பதவிக்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் அளித்த முக்கியத்துவத்தைக் குறித்தாகும்.

நற்குணம், நன்னடத்தை, நல்ல அறிவுரை போன்ற உயர்த்தன்மைமிக்க செயல்கள் மீது படைத்தவன் திருப்தியடைகின்றான். ஒரு நபி மொழியில் காணலாம். நபி(ஸல்) அவர்கள் நவின்றார்கள் **“எவர் ஒருவர் தன் தகப்பனை திருப்தியடைய செய்கின்றாரோ அவர் அல்லாஹ்வை திருப்தியடைய செய்கின்றார்”.** தந்தை மகிழ்ச்சியடையும் பொழுது அது படைத்தவனுக்கு பெரிதும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. மாறாக தந்தை மகிழ்ச்சியடையவில்லை என்றால் எல்லாம்வல்ல இறைவனும் இதில் மகிழ்ச்சியடைவதில்லை. இதுவே ஒவ்வொரு தந்தைக்கும் அல்லாஹ் அளித்திருக்கும் பதவி. இத்தகையிலான ஒரு பதவியாகும் நம் தந்தைக்கு அளித்திருப்பதுயென்றால் நபி(ஸல்) அவர்கள் தனது தந்தையாகிய ஹஸ்ரத் அப்துல்லாஹ்(ரலி) அவர்களுக்கு எந்த அளவிற்கு உயரிய பதவியை அளித்திருந்திருப்பார் என்பதைக் குறித்து சற்று யோசித்து பாருங்கள்?

ஹஸ்ரத் முஹம்மது(ஸல்) அவர்கள் பிறப்பதற்கு முன்னதாகவே அன்னாரை பெற்றெடுத்த (உயிரியல்) தந்தையாகிய ஹஸ்ரத் அப்துல்லாஹ்(ரலி) அவர்கள் இயற்கை எய்தியிருந்தார். எல்லா நிலையிலும் அனைத்து கோணத்திலும் நபி(ஸல்) அவர்கள், நம்பிக்கை கொண்ட மக்களுக்கு மிக சிறந்த ஒரு முன்மாதிரியாக திகழவேண்டும் என்று அல்லாஹ் விரும்பியிருந்தான். தன்னை பெற்றெடுத்த தந்தையை திருதூதர்(ஸல்) அவர்கள் பார்த்ததேயில்லை. என்றிருந்தும் ஒரு பெற்றெடுத்த தந்தையைப் போன்ற உரிமைகளுடன் ஒரு வளர்ப்பு தந்தையை அல்லாஹ் அன்னாருக்கு அளித்தான். அன்னார் அவரை மிக ஆழமாக நேசித்தார். முற்றிலும் சிறந்த முறையில் மதிப்பையும் மரியாதையையும் அவருக்கு செலுத்தினர். அது வாயிலாக அவர் எல்லா வகையான இருளிலிருந்தும் மீட்சியை பெற்றுக் கொண்டதுடன் நேர்வழி என்னும் வெளிச்சத்தை அடைந்துவிடவும் செய்தார். அது காரணம் அவர் சொர்க்கத்தில் நுழைந்து விடவும் செய்வார்.

திருக்குர் – ஆனிக வெளிப்பாடுகள் திருநபி பெற்று வரும் வேளைகளில், ஒருமுறை அன்னாரின் வளர்ப்பு தந்தையாகிய ஹஸ்ரத் ஹாரிஸ்(ரலி) அவர்களக்கு மக்காவை சார்ந்த மக்களை (குறைஷிகளை) சந்திக்க நேர்ந்தது. நபி(ஸல்) மீது நம்பிக்கை கொள்ளாத அக்குறைஷிகள் அவ்வேளையில் ஹஸ்ரத் ஹாரிஸ்(ரலி) அவர்களிடத்தில் கூறினார்கள்.

உங்களின் புதல்வன் கூறுகின்றார் **“இவ்வுலக வாழ்க்கைக்கு பிறகு மற்றொரு வாழ்க்கையுள்ளது” என்றும் “அவ்வாழ்க்கை இறுதி தீர்ப்பு நாளுக்கு பிறகாக நிகழும்” என்றும் “ஒருவர் புரியும் செயல்களுக்கு உகந்தவாறு அவர் சொர்க்கத்திற்கோ அல்லது நரகத்திற்கோ செல்வார்” என்றும் கூறிவருகின்றார்.**

**அத்துடன் "சிறந்த நம்பிக்கையாளர்கள் படைத்தவனின் அடைக்கலவட்டாரத்திற்குள் இடம் பெற்றுவிடுவார்கள்" என்றும் "அவநம்பிக்கையாளர்கள் நரகத்தில் தூக்கிவீசப்படுவார்கள்" என்றும் கூறுகின்றார்.** குறைஷிகளைப் பொறுத்தவரையில் தூதர்(ஸல்)வின் இத்தூதுச்செய்தி அவர்களின் ஒற்றுமையை உடைக்கும் வகையில் அமைந்திருந்தது.

ஹஸ்ரத் ஹாரிஸ்(ரலி) அவர்கள் அச்சமயத்தில் இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. என்றிருந்தும் அன்னார் திருநபி(ஸல்) அவர்களை சந்திப்பதற்கும் உதவிபுரிவதற்கும் சென்றார். திருநபி(ஸல்) அவர்கள் தன் வளர்ப்பு தந்தையை கண்ணியமிக்க முறையில் வரவேற்றுக் கொண்டார். அவ்வரவேற்பு ஒரு முன்மாதிரியாக இருந்தது. ஹஸ்ரத் ஹாரிஸ்(ரலி) அவர்களிடத்தில் குறைஷிகள் கூறிய காரியங்களை அன்னார் திருநபி(ஸல்) அவர்களிடத்தில் பகிர்ந்துகொண்டார். அதாவது மரணத்திற்கு பின் வரும் வாழ்க்கையைக் குறித்தும், அவர்களின் ஒற்றுமையை குலைக்கும் விஷயத்தை பற்றியும்! அதற்கு திருநபி(ஸல்) அவர்கள் அளித்த பதிலானது, ஒரேயொரு வாக்கியமாகயிருந்தது. அவ்வாக்கியம் ஹஸ்ரத் ஹாரிஸ்(ரலி) அவர்களில் மிக பெரிய ஈர்ப்பை ஏற்ப்படுத்தியது என்று மட்டுமல்லாமல் அவ்வார்த்தை என்னும் ஒளி அன்னாரின் இதயத்தில் ஊடுருவி அவரை திடமான ஒரு நம்பிக்கையாளராக பரிணமிக்கச் செய்தது. திருநபி(ஸல்) அவர்கள் அன்னாருக்கு உறுதியளித்தார். அதாவது **"தன் தூதுச் செய்தி உண்மையானது என்றும்" "அந்த மகத்தான நாளில் அதாவது தீர்ப்பு நாளில் நான், என் கரங்களால் உங்களை அரவணைத்து அழைத்து செல்வேன் என்றும்" "நான் பூமியில் வைத்து உங்களிடம் கூறியது உண்மையாக புலனாகி விடும்" என்றும் (திருநபி தன் வளர்ப்பு தந்தையாகிய ஹஸ்ரத் ஹாரிஸ்(ரலி) அவர்களுக்கு உறுதியளித்தார்).** திருநபி(ஸல்)வின் இந்த சொற்றொடர் பூமியையும் வானத்தையும் விட எடை வாய்ந்ததாக இருக்கின்றது. அதைவிட மேலாக, இது ஒரு சாதாரண மனிதரின் வார்த்தையல்ல. இவ்வார்த்தையானது அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் திரு உதட்டிலிருந்து உதிர்ந்ததாகும். இந்த வாக்கியத்தின் எடைதான் அவரை ஒரு நம்பிக்கையாளராக மாற்றியது.

நபி(ஸல்) அவர்களுக்கும், அவரது வளர்ப்பு தந்தைக்கும் இடையில் குடிகொண்ட உறுதியான பந்தத்தை இது சுட்டிக்காட்டுகின்றது. அந்நிலையில், திருதூதர்(ஸல்)வின் பெற்ற தந்தை வாழ்ந்திருந்திருந்தால் அவர் மீது எந்த அளவிற்கு பந்தம் வைத்திருப்பார் என்று இப்போது நீங்கள் சற்று யோசித்துபாருங்கள்? தன் வளர்ப்பு தந்தை அவநம்பிக்கையாளராக, நெறிதவறிய வழியில் இருந்திருந்தும் திருநபி(ஸல்) அவர்கள் அன்னாரிடம் நடந்து காட்டிய நன்னடத்தையின் விளைவாகத்தான் தன் வளர்ப்பு தந்தையை உண்மையான பாதையில் கொண்டுவர முடிந்தது.

# THE DUTY OF THE SON

## மகனின் கடமை

இன்றைய சமுதாயத்திற்கு இணங்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக இது அமைந்திருக்கின்றது. **ஒரு மகனின் முக்கியமான கடமை என்பது தந்தைக்கு நேரான வழியைக் காட்டுவதே ஆகும். அத்தந்தை சீர்க்கிலும் பாவத்திலும் மூழ்கிகிடந்தால், இருளிலிருக்கும் அத்தந்தையை நம்பிக்கையின்பால் கொண்டு செல்லும் மகனுக்கு மிக சிறந்த வெகுமதிகள் காத்திருக்கின்றது.**

வெளிச்சத்தை அடைந்த ஹஸ்ரத் ஹாரிஸ்(ரலி) அவர்களின் நேர்வினை(reaction) அளக்கமுடிவதற்கும் அப்பால் இருந்தது. மேலும் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் அவ்வேளையில் கூறிக்கொண்டார் **"தீர்ப்பு நாளில் சொர்க்கத்தில் நுழைந்துக் கொள்ளும் வரையில் நான் உங்களின் கரத்தை விடுவதில்லை".** இந்த வார்த்தை நம்மை ஈமானின்பால் அதாவது உறுதியான நம்பிக்கையின்பால் அழைத்து செல்கின்றது. தன் கரங்களில் பிடித்துக் கொண்டு சொர்க்கத்தில் நுழைவதற்கான வழிகள் தனது வளர்ப்பு தந்தைக்கு திருநபி(ஸல்) அளித்தார்.

இத்தகையிலான தந்தை-மகன் பந்தத்தை இன்றைய சமூகம் ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு நடந்து கொண்டால், சமூகத்திலிருந்து இருள் விலகி சென்று விடும். அத்துடன் சீர்க்கின் அனைத்து வாசல்களும் அடைந்துவிடும். அதன் விளைவாக ஆரோக்கியமும் அமைதியும் நிறைந்த சமூகம் உருவாகும். அங்கு நமக்கு மகிழ்ச்சியுடன் வாழமுடிந்துவிடும். தந்தையை நேர்வழியில் கொண்டு செல்லவேண்டும் என்பது மகனின்(அல்லது மகளின்) கடமையாகயிருக்கின்றது. அதைப்போன்றே நேர்மாறாகவும். அதாவது மகன் அல்லது மகள் நெறிதவறிய பாதையிலிருந்தால் அவர்களை நேர்வழியில் கொண்டு வரவேண்டியது ஒரு தந்தையின் கடமையாகும்.

**சஹாபாக்களும், தாபீன்களும், சாலிஹின்களும், ஆரீபீன்களும், முத்தகீன்களும் மற்றும் இறைபக்தர்களும், வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களும், அன்னாருக்கு முன் தோன்றிய முஜத்தீதுகளும் இச்செய்தியை கருத்தில் கொண்டிருந்தார்கள்.** ஹஸ்ரத் மிர்ஸாகுலாம் அஹமது(அலை) அவர்களுக்கு முன் தோன்றியிருந்த ஹஸ்ரத் அப்துல்காதிர் ஜீலானி(ரலி) அவர்கள் ஒரு சிறந்த மாஸ்டராகவும் மற்றும் நேர்வழிகாட்டுபவராகவும் இருந்தார். அன்னார் நான்கு திருமணம் செய்திருந்தார். அன்னாருக்கு 49 பிள்ளைகள் (ஆண் பிள்ளைகளும், பெண் பிள்ளைகளும்)இருந்தது. தந்தையும் பிள்ளைகளும் ஒன்றுக் கொன்றான பந்தம், மிக இனிமையாகவும் நெருக்கமாகவும் முன்மாதிரியாகவும் இருந்தது. வாக்களிக்கப்பட்ட மஸீஹின் பிள்ளைகளை குறித்து கூறிக்கொண்டால், அவர்கள்யாவும் இறையச்சமுடையவர்களாக இருந்தனர். அதில் ஒருவர் வாக்களிக்கப்பட்ட சீர்திருத்தாளராகவும் மற்றும் வாக்களிக்கப்பட்ட மகனாகவும் இருந்தார். ஆன்மீகமும் மற்றும் பௌதீகமுமான

மகன் என்ற நிலையில், தன் தந்தையின் கௌரவத்திற்கு மதிப்பையும், அன்னாரின் பணிக்கு செழிப்பையும் சேர்த்தார்.

எனவே மகன் தனது தந்தையையும், தந்தை தனது மகனையும் சிறந்த முறையில் பராமரித்துக் கொள்ள வேண்டும். ஒரு நல்ல தந்தை பெரும்பாலும் நல்ல பிள்ளைகளையே பெற்றெடுக்கின்றார். அதைப்போன்றே நல்ல பிள்ளைகள் தங்களது தந்தையை எல்லா வகையிலும் கவர்ந்து கொள்ளவும், அவரை சீர்திருத்திக்கொள்ளவும் செய்கின்றனர். எல்லாம் வல்ல அல்லாஹ்வை மகிழ்ச்சியடையவைக்கும் வகையில் அக்காரியங்கள் அமைகின்றது.

நமது அன்புக்குரிய தலைவர் அண்ணல் நபிகள் நாயகம்(ஸல்) மீதும் அவரது பிரியமான தந்தையார்கள்(அப்துல்லாஹ் (ரலி), ஹாரீஸ் ரலி) மீதும் அல்லாஹ் அவனது அருள்கொடைகளை பொழிவானாக! அத்துடன் அன்னாருக்கு பிரியமானவர்கள் மீதும் அன்னாரின் தூதுச் செய்தியை ஏற்றுக் கொண்ட நேர்மையான நம்பிக்கையாளர்கள் மீதும் பொழிவானாக! அன்னாருக்கு பிரியமுடையவர்களாக அல்லாஹ் நாம் அனைவரையும் மாற்றிவிடுவானாக!. பூமியில் நம் வாழ்நாள் முழுவதும் அன்னாரின் முன்மாதிரியை பரிபூரணமாக எப்போதும் பின்பற்றிக் கொள்வதற்காக பாக்கியத்தை நமக்கு தந்தருள்வானாக! இன்ஷா அல்லாஹ். ஆமீன்.


**Translated by:**

*Azim Ahmad*

**E-mail:** azimahmad070@gmail.com
**Cell:** 9789180817
**Web:** www.jamaat-ul-sahih-al-islam.com

**Issued by:**

**R. Jamaluddin Raother**
**Amir - Kerala South Zone, India**
**Jamaat Ul Sahih Al Islam**
**Email:** **jamal.raother@gmail.com**
**Phone:** 9447001832, 04752252663